[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜுன் 25

8. காச நோயாளிகளுக்கு சிறந்த ஊட்டச்சத்து வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, நடப்பாண்டில் 96 ஆயிரத்து 200 காச நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவு 20 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் நலன் காக்கும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் "மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மையம்" ஒன்று 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. நடப்பாண்டில், காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில், மாணவியர் விடுதிகள் 20 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ இயக்குநரகத்தின்கீழ், 12 அரசு துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சிப் பள்ளிகளின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில் எழும்பூர், பூவிருந்தவல்லி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 இடங்களில் உள்ள துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு, 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் அறிவித்துள்ள இந்தத் திட்டங்களால் அரசு மருத்துவமனைகள் மேலும் சிறப்பாகச் செயல்பட்டு, ஏழை எளிய மக்கள் உயர்தர மருத்துவ சேவை பெற வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்கு தமிழகத்தினுடைய

2018 ஜூன் 25] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மக்கள் நல்வாழ்வுத் துறை இந்தியாவிலேயே ஒரு முதன்மைத் துறையாக மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முன்னோடித் துறையாக, சிகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், மேலும் புதிய அறிவிப்புகளாக, இயற்கை மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு துறையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவான, பின்தங்கிய மாநிலங்களுக்குத்தான் முன்னுரிமை என்றிருக்கக்கூடிய சூழ்நிலையில், வளர்ந்த மாநிலமான தமிழகத்திற்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், AIIMS மருத்துவமனையைத் தமிழகத்திற்குத் தொடர்ந்து வலியுறுத்தி கேட்டு, வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) 1,500 கோடி ரூபாயிலே, மிகப் பெரிய வரலாற்று நிகழ்வை ஏற்படுத்திக் கொடுத்ததற்கும், ஒட்டுமொத்த தமிழக மக்களுடைய சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, தென் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில், மதுரை, தோப்பூரிலே அமையவிருக்கின்ற இந்த AIIMS மருத்துவமனை (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் ஒரு மிகப் பெரிய வரப் பிரசாதமாக நிச்சயமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The Gateway of North Madras என்றால், அது நம்முடைய இராயபுரம் தொகுதிதான். அங்கு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மருத்துவமனை நம்முடைய ஸ்டான்லி மருத்துவமனை. அதற்கு 55 கோடி ரூபாய் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)